செ.வெ.எண்: 575 நாள்: 25/09/2011

# செய்தி வெளியீடு

இன்று காலை (25.9.2011) நேபாளத்தில் 19 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் சுற்றுலாவை முடித்து விட்டு காத்மாண்டு விமான நிலையத்தை நோக்கி திரும்பும் போது, மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட விமானத்தில் பயணித்த அனைவரும் அகால மரணமடைந்தனர். இவர்களின் அகால மரணம் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆழ்ந்த இரங்கல் தெரிவித்திருந்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூற மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. என்.ஆர்.சிவபதி அவர்களை அனுப்பி வைத்துள்ளார்கள்.

மேலும், இந்த கோர விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் உடல்களை அடையாளம் கண்டு, திருச்சிராப்பள்ளிக்குக் கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக, இறந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த எட்டு நபர்களை நேபாள் தலைநகர் காத்மாண்டுக்கு அழைத்துச் செல்லுமாறும், தேவையான உதவிகளைச் செய்யுமாறும் திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ப. குமார் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

******

வெளியீடு: ஆணையர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை - 9
நாள்: 25.9.2011